முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதிபி

வ.சா. 1 நாள்.10.04.2023

| O.S No. | 41/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | முகிலன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் வாதியாவேன். பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்கிறேன். நான் பிரதிவாதியிடம் இடத்தை அடமானம் வைத்துள்ளதால் அதனை மீட்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை அடமானம் வைப்பதற்கு முன்பாக நான் பிரதிவாதியிடம் சாகுபடிக்காக கொடுத்திருந்தேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 2010 ஆம் வருடத்திற்கு முன்னரே எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே என்ன சமரசம் பேசப்பட்டது என்றால் பிரதிவாதி எனது இடத்தை விலைக்கு கேட்டு அதற்கு நான் ஒப்புக்கொண்ட அவரிடமிருந்து பணம் பெற்ற நிலையில் சொத்தின் விலை மற்றும் விஸ்தீரணத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் ஊர்மக்கள் முன்னிலையில் சமரசம் பேசப்பட்டு அவரிடமிருந்து பெற்றிருந்த தொகையினை 2008 ஆம் வருடத்தில் திருப்பி கொடுத்துவிட்டேன். 2007 ல் ஏற்பட்ட அக்கிரிமேண்டின்படி எத்தனை வருடங்கள் பிரதிவாதி சாகுபடி செய்தார் என்றால் நான் இடத்தை பிரதிவாதியிடம் ஒப்படைக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அறிவிப்பு நான் சொல்லி எனது வழக்கறிஞரால் 09.06.2010 தேதியில் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அறிவிப்பில் 29.09.2007 ல் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி முழுத்தொகையினையும் பிரதிவாதி கொடுக்காமல் துராக்கிரகமாக சொத்தில் அத்துமீறிவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சமரசம் ஏற்பட்டத தான் ஞாபகத்தில் உள்ளது. இந்த அறிவிப்பு கொடுத்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கபடும் உடன்படிக்கை பிரதிவாதியுடன் நான் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை என்றால் சரிதான். அந்த உடன்படிக்கை பி.சா.ஆ.1 ஆகும். உடன்படிக்கையில் 2008 க்குள் கிரயம் செய்துகொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. 2008 ம் ஆண்டு வாக்கிலேயே பிரதிவாதி கொடுத்திருந்த தொகையினை அவரிடம் நான் திரும்ப

கொடுத்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கபடும் பி.சா.,ஆ.1 ஆவணத்தில் உள்ள மேற்குறிப்புகள், அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல. அதன்படி நான் பிரதிவாதியிடம் தொகையினை பெற்றுக்கொள்ள வில்லை. அறிவிப்பிற்கு 04.08.2010 தேதியில் பதிலறிவிப்பு வந்ததை நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 2010 ல் ஏற்பட்ட போக்கிய கடன் அடமானம் வெள்ளைத்தாளில் எழுதப்பட்டது. அதனுடைய நகல் என்னிடம் இல்லை. போக்கிய கடன் அடமானமே ஏற்படவில்லை என்றும் அதனால் தான் என்னிடம் அதன் நகல் இல்லை என்றும், அதனால் தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதன்முதலில் பிரதிவாதியிடம் அந்த இடத்தை கொடுத்தபோது முற்புதராக இருந்தது என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்த நிலையில் தான் வைத்திருந்தேன். என்னுடையது சகோதரர், சகோதரி ஆகியோர்களின் நிலங்களை சேர்த்து கிரய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால்சரிதான். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இருந்ததால் அப்படி எழுதிக்கொடுத்தேன். கிரய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த தேதி ஞாபகம் இல்லை. அந்த கிரய ஒப்பந்தத்தில் நான் ரூ.3,00,000/- நான் பிரதிவாதியிடம் வாங்கினேன். அதன் பின்னர் 29.12.2007, 29.09.2008, 31.01.2009 ஆகிய மூன்று தவணைகளில் அந்த பாக்கித் தொகையினை பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. ஆக நான் ரூ.7 லட்சம் பெற்றுக்கொண்டு அவரை நான் ஏமாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த கிரய ஒப்பந்ததில் யார் யார் எல்லாம் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. தாவா சொத்து தொடர்பாக பிரதிவாதிக்கு நான் ஒரு முறை தான் அறிவிப்பு அனுப்பினேன். 09.06.2010, 31.10.2018, 21.05.2019 ஆகிய தேதியிகளில் நான் மூன்று முறை பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல, இரண்டு முறை தான் அனுப்பியுள்ளேன். 21.05.2019 Rejoinder அறிவிப்பு அனுப்பினேன். நான் தாவா சொத்தினை கிரய ஒப்பந்தம் மூலம் பணத்தை பெற்றுக்கொண்டு அதே தாவா சொத்தினை வங்கியில் கடன் பெற்றதால் தான் கிரய ஒப்பத்தப்படி செயல்படுத்த முடியவில்லை என்றால் சரியல்ல. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பெற்ற கடனை நான் சரியாக செலுத்தாமல் அவர்கள் வழக்கு தாக்கல் செய்து ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு ஆகியுள்ளது என்றால் தெரியவில்லை. ஆனால் வங்கித் தரப்பில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். நான் வழக்குறையில் கூறியுள்ளவாறு பிரதிவாதியிடம் ரூ.50,000/- கொடுத்ததற்கு என்னிடம் எந்தவித ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். Rejoinder ல் ்அறிவிப்பு கொடுத்த விபரம் ஞாபகம் இருக்கிறதா என்றால் 3 ஏக்கர் 16 செண்ட் என்று தவறுதலாக அறிவிப்பு

கொடுத்துள்ளதால் விற்று போக கையில் உள்ள நிலம் 1 ஏக்கர் 52 செண்ட் என்பதால் வழக்கறிஞரிடம் சொல்லி Rejoinder அறிவிப்பு அனுப்பினேன். 2007 ல் 7 ஏக்கர் 30 செண்ட் நிலம் என்னிடம் வசத்தில் இருந்ததற்கு நான் நிவாரணம் பெற்றுக்கொண்டதற்காக ஆவணம் வைத்திருக்கிறீர்களா என்றால் நிவாரணம் பெற்றதாக ஞாபகத்தில் இல்லை. விவசாயம் நான் செய்திருந்தால் எனக்கு நிவாரணம் கிடைத்திருக்கும் என்றால் சரிதான். 2010 ற்கு முன்பே நான் பிரதிவாதியிடம் பணத்தை திரும்ப கொடுத்ததாக நான் எந்த ஆவணமும் எழுதி வாங்கிக்கொள்ள வில்லை. நான் ஏன் அதன் பின்னர் உடன்படிக்கையை திரும்ப வாங்கிக்கொள்ள வில்லை என்றால் ரத்தானதால் திரும்ப வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்பதால் நான் வாங்கவில்லை. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் வாங்குவதற்கு முன்பாவே வேறு வங்கியில் இதே சொத்தினை அடமானம் வைத்து பணம் வாங்கியுள்ளீர்கள் என்றால் நான் வாங்கவில்லை. 31.08.2009 ல் மயிலாடுதுறை தொடக்க வேளாண்மை வங்கியில் தாவா சொத்தின் மீது கடன் பெற்றேனா என்றால் விவசாய கடன் பெற்றேன். எனது சகோதரர் மற்றும் சகோதரிகளின் சொத்திற்கு நான் அவர்களிடம் ஆவணம் ஏதாவது பெற்றேனா என்றால் இல்லை. நாங்கள் ஒரே குடும்பம் என்பதால் நம்பிக்கையின் பேரில் செயல்பட்டேன். எனது அண்ணனின் சொத்தும் பிரதிவாதியிடம் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது, அவர் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 23.10.2009 தேதியிட்ட கிரய உடன்படிக்கையில் எனது அண்ணன் அவரது நிலத்தை பிரதிவாதிக்கு விற்க ஒப்புக்கொண்ட உடன்படிக்கையில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால், அண்ணன் கேட்டதால் நான் போட்டுக்கொடுத்தேன். நான் சகிலா பேகம் என்பவருக்கு எனக்கு சொந்தமான 3 ஏக்கர் 16 செண்ட்டில் 1 ஏக்கர் 52 செண்டினை எனக்கு ஒதுக்கிக்கொண்டு மீத சொத்தினை அவருக்கு விற்றுவிட்டேன். தாவா சொத்தினை பிரதிவாதிதான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் இல்லை. 2007 ல் நான் கிரய ஒப்பந்தம் ரூ.7 லட்சத்திற்கு செய்துகொண்டீர்களா என்றால் இருக்கும். பிரதிவாதியிடம் பேசிக்கொண்ட விலைக்கு சகிலா பேகத்திடம் கிரயம் கொடுத்தேனா அல்லது கூடுதல் விலைக்கு கிரயம் கொடுத்தேனா என்றால் கூடுதல் விலைக்கு கொடுத்தேன். நான் வங்கியில் அடமானம் வைத்து விட்டதால் அசல் ஆவணம் என்னிம் இல்லாததால் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்க முடியவில்லை என்றால் வங்கியில் அடமானம் வைத்தேன் ஆனால் அதற்கும் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்காததற்கும் சம்பந்தம் இல்லை. நிலத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் நான் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்க

மறுக்கிறேன் என்றால்சரியல்ல, அவரிடம் போட்ட உடன்படிக்கை ரத்தாகி ஆகிவிட்டது. தாவா சொத்தையும், வேறு சில சொத்தினையும் பிரதிவாதியிடமிருந்து முழுத்தொகையினையும் பெற்றுக்கொண்டு அவரை ஏமாற்றிட இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பொய் வழக்கு என்பதால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.